# Mn / Karunkandal R.C.T.M.V

## Annual Prize Giving - 2013







# வருடாந்த பரிசளிப்பு விழா - 2013

காலம் :- 30. 07. 2014

நேரம் :- பி.ப 5.00 மணி

இடம் :- பாடசாலை மைதானம்

## பிரதம விருந்தினர்

**கௌரவ. பா. டெனிஸ்வரன்**

(Minister - Fisheries, Transport, Rural Development and Trade and Commerce - Nothern Province)

## சிறப்பு விருந்தினர்கள்

**கௌரவ. றிப்கான் பதியுதீன்**

(Member of Provincial Council - Nothern Province)

**அருட் சகோ. R. ஜோசப் ஜெயகாந்தன் F.S.C**

(Principal - St. Joseph's College - Grandpass)

## விசேட விருந்தினர்

**திரு. J. A. குரூஸ்**

(Zonal Director of Education - Madhu)

## தலைவர்

**அருட் சகோ. S. C. விஜயதாசன் F.S.C**

(Principal - Mn/Karunkandal R.C.T.M.V)

# கடவுள் வாழ்த்து

அகரமும் னகரமும் ஆதியும் அந்தமுமானவரே
அகவிருள் அகற்றி அறிவொளி அளிப்பவரே
அனுதினம் எமக்கு அறிவொளி தருபவரே
அன்பே உமது அடியினை தொழுவோம்

கருங்கண்டல் என்னும் கலை மிகு கல்லூரி
காலமெல்லாம் நல் மணம் பரப்பி
ஞாலம் புகழ நல்லன செய்திட
ஞான விளக்கே உம் நலத்தினை புரிவாய்

அறிவின் ஊற்றால் அயராது உழைக்கும்
அதிபர் ஆசான்கள் அனைவர் வாழ்விலும்
ஆண்டவா உமது அருட்துணையிருந்து
அல்லும் பகலும் காத்திட வேண்டுவோம்

உண்மையை கவசமாய் பூண்டமணிகள்
உயரிய பேறினைச் சூடும் மலர்களாய்
உலகம் போற்றிடும் உயரிய மனிதராய் - எம்
மாணாக்கர் விளங்க அருளினை பொழிவாய்

கல்லூரி தாயை கனம் பண்ணும் சமூகம்
கண்ணின் இமையாய் காத்திடும் சமூகம்
எண்ணிய கருமத்தை திண்ணமாய் முடிக்கும்
எழில் மிகு சமூகத்தை படைத்திட வாரும்

ஒளியே வழியே உயரிய பேறே
உம்மை வணங்கி பணிந்து கேட்கிறோம்
நன்மை பொழியும் உலகத்தை படைத்திட
நலமே செய்து நாளும் காத்திடும்.

# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்தும் மளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இநைகொண்டு வாழியவே
ஏங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்க தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானமறிந்த தனைத்தும் மறிந்திடும்
வளர்மொழி வாழியவே!

## கல்லூரிக்கீதம்

தரணியோர் பலர் புகழ்
கலை நெறி வளரும்
தலமெனத் திகழும் இலங்கை
கலகல நெல் நிறை
மாந்தையில் ஞான்றும்
கலை வளர்க்கல்லூரி இதுவே
தருமருள் நெறியிலே வளர்ந்திட தினமுமே
தாழ் பணிந்திடுவோம் பாதம்

புகழ் கூறுவோம் பரமனுக்கே
புகழ் கூறுவோம் பரமனுக்கே
புது மலர் தூவியே புகழ்வோம்

நின்றொழி வீசிடும் எங்கள் கல்லூரியை
நேசித்து நிதம் பாதுகாப்போம்
ஜெயமே ஜெயமே ஜெயமே
ஜெய ஜெய ஜெயம் பெறவே
யேசு கைத் தாதையும்
நண்பர் அந்தோனியும்
என்றும் எமைக் காப்பாரே
ஏந்திடும் துவசங்கள் நீலம், பச்சை, சிகப்பு
எமக்கே வெற்றியைத் தருமே
ஏந்தலர் துணையும் ஏனையோர் துணையும்
என்றென்றும் எமக்கே பெருக

புகழ் கூறுவோம் பரமனுக்கே
புகழ் கூறுவோம் பரமனுக்கே
புது மலர் தூவியே புகழ்வோம்

நின்றொழி வீசிடும் எங்கள் கல்லூரியை
நேசித்து நிதம் பாதுகாப்போம்
ஜெயமே ஜெயமே ஜெயமே
ஜெய ஜெய ஜெயம் பெறவே
ஜெய ஜெய ஜெயம் பெறவே
ஜெய ஜெய ஜெயம் பெறவே

# பங்குத்தந்தையின் ஆசிச் செய்தி



"எனக்கு குறிக்கப்பட்ட பந்தயத்தில் ஓடினேன் இப்போது எனது ஓட்டத்தை முடித்து விட்டேன் அதற்கான வெற்றிவாகையை ஆண்டவர் எனக்கு அளிப்பார்" சாதனையாளர்கள் பாராட்டப்படுவதும் கௌரவிக்கப்படுவதும், சாதனைக் கிண்ணங்கள் வழங்கப்படுவதும் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. அந்த வகையில் இக்கல்லூரியிலே கடந்த காலங்களிலே சாதனை படைத்தவர்களை கௌரவிக்கின்ற இந்த நிகழ்வானது இப்பாடசாலை வரலாற்றிலே முதற்தடவையாக நடைபெறுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். கல்வி, விளையாட்டு, இன்னும் பல துறைகளிலே சாதனை படைத்த நம் பிள்ளைகளை இனங்கண்டு பாராட்டிக் கௌரவிக்கின்ற இந்நிகழ்வானது செவ்வனே நடந்தேற இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

*அருட்பணி செ. வசந்தகுமார்*

பங்குத்தந்தை,

புனித சூசையப்பர் ஆலயம்,

காத்தான்குளம்.

# பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி



அன்பார்ந்த அதிபரே, ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே!

உங்களுக்கு எனது வாழ்த்துக்களும் பாரட்டுக்களும்.

மாணவர்கள் எப்போதும் போட்டி மனப்பாங்கில் வாழ்பவர்கள். அதுவிளையாட்டாக இருக்கலாம் அல்லது கல்வியாக இருக்கலாம் அவர்களுக்கு ஒரு வெற்றி அல்லது தோல்வி என்ற இலக்கு தேவையாக இருக்கின்றது. இதேபோன்று வாழ்க்கையிலும் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு இலட்ச்சியம் உண்டு அதனை அடையக் கடின உழைப்பு அவசியம். Dr. அப்துல்கலாம் சொன்னதுபோல் "இலட்சியத்தை நோக்கி கனவு காணுங்கள், உறக்கத்தில் வருவதில்லை கனவு உன்னை உறங்கவிடாமல் செய்வதுதான் கனவு" அந்தவகையில் பலகனவுகள், திறமைகளுடன் இந்தபாடசாலைச் சமூகத்தில் மாணவர்கள் பலர் கல்விகற்க்கின்றார்கள். அவர்களை உருவாக்குவதில் அதிபர், ஆசிரியர்கள் கடுமையாக உழைக்கின்றார்கள்.

ஒரு கட்டுமாணத்தை எடுத்துகொண்டால் அத்திவாரம் மிக அவசியமானதாகும். அதேபோல் பாடசாலையை எடுத்துகொண்டால் இங்கு உருவாக்கப்படும் மாணவர்கள் தான் எதிர்காலத்தின் தூண்களாக சமூகத்தை வழி நடத்தவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களை உற்சாகப்படுத்தி மேலும் முன்னேற்ற வழி சமைப்பது இது போன்ற பரிசளிப்பு நிகழ்வுகளாகும். எனவே இன்றுபரிசில்களைப் பெறும் மாணவர்களுக்கு எனது விசேட பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்வடைகின்றேன். இன்றைய இந் நிகழ்வானது ஏனைய மாணவர்களுக்கும் உந்துசக்தியாக அமையும் என நம்புவதோடு இப்பாடசாலையும் அதன் சமூகமும் தொடர்ந்து திறம்பட செயற்பட எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

நன்றி

அன்புடன்

***பா. டெனிஸ்வரன்***

அமைச்சர்

மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தகவாணிபம்

மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு,

வடமாகாணம்.

# சிறப்பு விருந்தினரின் ஆசிச் செய்தி



மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வித்தியாலயத்தின் 2013ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு வாழ்துக்கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். சாதனைகளைப் பாராட்டுகின்ற தன்மை அருகி வருகின்ற இக்காலப்பகுதியிலே இப்பாடசாலையில் பரிசளிப்பு விழாவினை நடாத்தி வெற்றியீட்டிய மாணவர்களை ஊக்குவிக்க இவ்வாறான ஒரு விழாவினை நடாத்துவதினைப் பார்க்கின்றபோது பேருவகையடைகின்றேன்.

இவ்விழாவின் மூலம் மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டு மேலும் மேலும் தங்களது திறமைகளை வெளிக்கொணர்வதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாக அமையும் என்பதில் எனக்கு எதுவிதமான ஐயப்பாடும் கிடையாது. இவ்வாறான விழாக்கள் எல்லாப் பாடசாலைகளிலும் நடாத்தப்பட்டு மாணவர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும் என்று நான் ஆசித்து நிற்கின்றேன்.

மாறிவருகின்ற நவீன உலகிற்கேற்ப, அவற்றை எதிர்கொள்ளக்கூடிய மாணவர் சமுதாயத்தை உருவாக்க வேண்டிய கடப்பாடு அவர்கள்முன் வாழ்கின்ற எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அவ்வகையிலே மாணவர்களுக்கு வேண்டிய, காலத்தின் தேவைக்கேற்ற கல்வி அறிவைப் புகட்டி இந்நாட்டிலே நல்ல தலைவர்களாக உருவாகுகின்ற மனித விழுமியங்களை மதிக்கின்ற முழுமனித ஆளுமை கொண்ட நற்பிரஜைகளாக வெளிவந்து நல்ல சமுதாயங்களைக் கட்டியெழுப்புகின்றவர்களாக இம்மாணவர்கள் திகழ வேண்டுமென நான் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

மாணவர்களின் உருவாக்கற் பணியில் இணைந்து செயற்படுகின்ற இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச்சமூகத்திற்கு எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் கூறி இவ்விழா சிறப்புற நடைபெற ஆசித்து நிற்கின்றேன்.

*கௌரவ. றிப்கான் பதியுதீன்*
வடமாகாண சபை உறுப்பினர்

## வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி



மருத நிலமதில் மங்காத ஒளிச்சுடராய் மாந்தைப் பகுதியில் மணம் வீசும் மலராய் வளனாரும், பதுவைப்பதியாரும் அருகிருந்து அறிவொளியை ஊட்டுகின்ற மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வி இன் 2013ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

மடு வலயப் பாடசாலைகளில் வளர்ந்து வருகின்ற கல்லூரிகளில் இப்பாடசாலையும் கைகோர்த்து பயணிக்கின்ற போது இதன் கன்னி முயற்சியான இப்பரிசளிப்பு விழா பலரின் பாராட்டைப் பெறும் என்பதில் ஐயமில்லை. இவ்விழாவானது மாணவர்களின் கல்வியிலும் அதனுடன் இணைந்த சகல துறைகளிலும் முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லுகின்ற படிக்கல்லாக அமையும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை ஆகும்.

ஒவ்வொரு மாணவர்களினதும் தனித்திறமைகளை இனங்கண்டு அவற்றை வளர்த்தெடுப்பதோடு ஏனைய மாணவர்கள் தாங்களும் பரிசு பெற வேண்டும் என்ற அவாவையும் ஆர்வத்தையும் இவ்விழா தூண்டுவதாக அமையும் என நான் நம்புகின்றேன்.

இப்பகுதியில் எதிர்காலத்தில் நல்ல தலைவர்களை, ஒழுக்கசீலர்களை, கல்விமான்களை உருவாக்க வேண்டுமென மடுவலய கல்வி அலுவலகம் சார்பாக வாழ்த்தி நிற்கின்றேன்.

*திரு. A. J. குரூஸ்*
வலயக் கல்விப் பணிப்பாளர்,
மடு வலயம்.

# சிறப்பு விருந்தினரின் ஆசிச் செய்தி



மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வித்தியாலயத்தின் 2014ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவிற்கு ஆசியுரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

எண்ணங்களிலிருந்து நிஜ வாழ்கைக்கும் கனவிலிருந்து நனவிற்கும் அழிவிலிருந்து ஆக்கத்திற்கும் இட்டுச்செல்லும் பாடசாலை முதல்வர் அருட் சகோதரர் S.C. விஜயதாசனின் எண்ணக்கனவின் வெளிப்பாடாகவே இப்பரிசளிப்பு விழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தடங்கி நிற்கும் பிள்ளையைத் தட்டிச்செல்லும் காற்றாகவும், கலங்கி நிற்கும் அறிவைத் தெளிவிக்கும் சஞ்சீவியாகவும் இப்பரிசளிப்பு விழா இருக்கும் என்பதையிட்டு உள்ளம் உவகை கொள்கின்றது.

இப்பரிசளிப்பு விழாச் சிறப்புற, உழைக்கும் அனைத்து உள்ளங்களையும் எனது மனதார வாழ்துவதோடு இறைவனையும் வேண்டி நிற்கின்றேன்.

*அருட் சகோ.* R. *ஜோசப் ஜெயகாந்தன்* F.S.C
அதிபர்
புனித. சூசையப்பர் கல்லூரி
கிராண்பாஸ்
கொழும்பு.

# நிர்வாகக் கட்டமைப்பு

அதிபர்
*(அருட்சகோ. S.C விஜயதாசன்)*

↓

பிரதி அதிபர்
*( திருமதி. S. ராஜசேகரன் )*

↓

உப அதிபர்
*திரு A. அமிர்தநாதன்*

↓

பகுதித் தலைவர்கள்

| 1 - 5 | 6 - 9 | 10 - 13 |
|---|---|---|
| திருமதி.U.கென்றி | அருட்சகோ.J.கணுதப்பர் குரூஸ் | திரு.S.A. சில்வெஸ்ரர் |

## பரிசளிப்பு விழாக் குழு

திருமதி.U. கென்றி (தலைவர்)

திரு. J.T. சிம்சன்

திருமதி.D. அருள்ஜெயந்தன்

திரு.S. பகிர்தராஜா

# ஆசிரியர்கள் குழாம் - 2014



## சகலதுறை சிறந்த மாணவர் – 2013



சா. டிவ்பான் கிறிஸ்ரி



றோ. பியூறிக்கா



கொ. டிசோன்

## 2013 இல் க. பொ. த. சாதாரண தரத்தில் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள்



ஸ். கெத்சியா



ம. பவுஸ்ரீனா



செ. றொடக்சினி

# அதிபரின் ஆண்டறிக்கை

மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வித்தியாலயத்தின் 2013ஆம் ஆண்டிற்கான வளர்ச்சிப்பாதையினை அறிக்கையாக சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பாடசாலையானது பல வருட காலமாக திரு. S.F. சேவியர் அவர்களின் தலைமையில் இயங்கி வந்தது. அவர் மாற்றமாகிச் செல்லும் காலப்பகுதியில் பாடசாலை அபிவிருத்தி சங்கத்துடன் இணைந்து ஒரு டிலாசால் அருட் சகோதரரை அதிபராக கொண்டுவர வேண்டும் என்று எண்ணம் கொண்டு பல பணிகளை மேற் கொண்டு விடாமுயற்சியுடன் செயற்பட்டார்கள். அதன் பயனாக 12.03.2013 இல் இப்பாடசாலையை அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டேன். அந்த வகையிலே இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் S.F. சேவியர் அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இம் முயற்சியில் பல சிரமங்களை எதிர்கொண்ட பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் மற்றும் பல ஆலோசனை வழிமுறைகளை வழங்கிய திரு. சந்தியோகு (செல்லத்தம்பு) ஐயா அவர்களுக்கும் மிகவும் சிறப்பாக வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் அல்ஹாஜ் றிசாட் பதியுதீன் அவர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றேன்.

எமது பாடசாலையானது ஏறக்குறைய 325 மாணவர்களையும் 28 ஆசிரியர்களையும் கொண்ட 1C தரம் கொண்ட பாடசாலையாகும். இப் பாடசாலையில் மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி ஒழுக்கம், ஆக்கம், விளையாட்டு, இணைப்பாட விதானச் செயற்பாடுகள் போன்றவற்றில் சிறந்து விளங்க தேவையான பயிற்சிகளும் ஆலோசனைகளும் வழிநடத்தல்களும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலையில் இவ்வருடம் பல வரலாற்று சாதனைகள் படைக்கப்பட்டுள்ளமை இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு சிறப்பான எடுத்துக்காட்டுகளாக உள்ளன. சிறப்பாக 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் ஒரே தடவையில் 6 மாணவர்கள் சித்தி பெற்றமையும் 15 வயதிற்குட்பட்ட பெண்கள் கபடி அணி மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டத்தில் பங்குபற்றியமையும் க.பொ.த பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினை பெற்று மடு வலயத்தில் முதலாம் இடத்தினைக் கைப்பற்றியதையும் இப்பாடசாலையின் சாதனைகள் என கூறுவதில் பேருவகை அடைகின்றேன்.

எமது பாடசாலையின் நிகழ்வுகளையும், நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்களையும், இணைப்பாடவிதான செயற்பாடுகளையும், வெற்றிச் சாதனைகளையும் அறிக்கையாக சமர்ப்பிப்பதில் புளகாங்கிதம் அடைகின்றேன். இந்த சாதனைகளையும், வெற்றிகளையும் பெற்றுக் கொள்வதில் எனக்கு ஒத்துழைப்பையும் பாரிய பங்களிப்பையும் வழங்கிய எனது பிரதி அதிபர் திருமதி. S. ராஜசேகரன், உதவி அதிபர் திரு.A.அமிர்தநாதன் பகுதித்தலைவர்கள் அருட்சகோ. J. கனுதப்பர் குருஸ், திரு.S.A. சில்வெஸ்ரர், திருமதி U.கென்றி ஆகியோருக்கும் எனது அன்புக்குரிய ஆசிரியப் பெருந்தகைக்கும், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

## கல்விச் செயற்பாடுகள்

எமது பாடசாலையில் 2013ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 17 மாணவர்கள் தோற்றி 6 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இம் மாணவர்களில் 15 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். கடந்த வருடங்களோடு ஒப்பிடுகையில் இவ் வருடத்தில் எண்ணிக்கை அதிகரித்ததோடு மாவட்டமட்டத்தில் ஜெபக்கிரீடம் டினுஸ்கர் என்ற மாணவன் "9"ஆவது இடத்தைப்பெற்றுள்ளார். இம் மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து பயிற்றுவித்த ஆசிரியர் திருமதி D.சர்மிளா அவர்களை எமது பாடசாலைச் சமூகம் பாராட்டி நிற்கின்றது.

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் பெயர்கள் வருமாறு

1. ஜெபகிரீடம் டினுஸ்கர் - 179
2. மகாலிங்கம் மதுசாளினி - 166
3. கொன்சால்வேஸ் டிசோன் - 164
4. ஸ்ரான்லின் கிருசன் - 159
5. ரமேஸ் விதுசா - 158
6. யூலியன் சிபானி - 156

க.பொ.த சாதாரண பரீட்சைக்கு 21 பேர் தோற்றி 17 பேர் சித்தி பெற்று க.பொ.த உயர்தர வகுப்பிற்கு தகமை பெற்றுள்ளனர். இவ் வருடம் எமது பாடசாலை 63% சித்தியைப் பெற்றது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இதில் பாடசாலைமட்டத்தில்

**ஸ்ரனிஸ்லாஸ் கெப்சியா** 1ஆம் இடத்தினையும்

மரியான் பௌஸ்ரீனா 2ஆம் இடத்தினையும்

**செபஸ்ரியான் மரியறொடக்சினி** 3ஆம் இடத்தினையும் பெற்றுள்ளார்கள்.

இதில் எமது பாடசாலையின் மாணவி செல்வி ஸ்ரனிஸ்லாஸ் கெப்சியா 6A2BS என்ற பெறுபேற்றை பெற்று மடு வலயத்தில் சிறந்த மாணவியாக தெரிவு செய்யப்பட்டமை எமது பாடசாலைக்கு கிடைத்த பெருமையாகும்.

மேலும் புவியியல், விவசாயம், இலக்கியநயம், நாடகமும் அரங்கியலும், சைவசமயம், கிறிஸ்தவசமயம், பரதநாட்டியம், கர்நாடகசங்கீதம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் 100% சித்தியைப்பெற்றுள்ளனர். இந்த நூறு வீத சித்திக்கு காரணமாக இருந்து ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த ஆசிரியர்களை பாடசாலை சமுகம் வாழ்த்தி நிற்கின்றது. அது மட்டுமல்லாது சிறப்பாக வரலாறு பாடத்தில் 85% சித்தியைப்பெற்றுதந்த ஆசிரியர் திருமதி.M.தொம்மை அவர்களுக்கும், எமது பாடசாலையில் தமிழ்ப்பாட ஆசிரியர் இல்லாத போதும் எமது மாணவர்களுக்காக முன் வந்து கற்பித்து தமிழ்ப்பாடத்தில் 95% சித்தியை பெற்று தந்த ஆசிரியர் திருமதி.C.T.சதீஸ்வரன் அவர்களுக்கும் சித்திர பாடத்தில் 86% சித்தியைப் பெற்றுதந்த ஆசிரியர் திரு.J.T.சிம்சன் அவர்களுக்கும், நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம். நூறுவீத சித்தியைப்பெற காரணமாக இருந்த ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு.

1. திருமதி M.சுரேஸ் - புவியியல்
2. திரு A.அமிர்தநாதன் - விவசாயம்
3. திருமதி C.T.சதீஸ்வரன் - இலக்கியநயம்
4. செல்வி M.ஆன்துஷ்யந்தி - நாடகமும் அரங்கியலும்
5. திருமதி S.றதீஸ்குமார் - சைவசமயம்
6. திருA ஜெனிபேட் பீரிஸ் - கிறிஸ்தவசமயம்
7. திருமதி V.உமாசங்கர் - பரதநாட்டியம்
8. திரு S.சுகர்ணன் - கர்நாடகசங்கீதம்
9. திருமதி N.M.தாயானந்தி - வர்த்தகம்
10. திருமதி.D.அருள்ஜெயந்தன் - தகவல் தொழில்நுட்பம்

எமது பாடசாலையில் கணிதப்பாட ஆசிரியர் இல்லாத போதும் எமது மாணவர்களுக்கு மாலை நேரத்தில் கற்ப்பித்து 63% பெற்று தந்த ஆசிரியர் F.K. றிமான்ஸ் டலிமா அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்து நிற்கின்றோம். மேலும் புவியியல், தமிழ், விஞ்ஞானம், பொருளியல் ஆகிய பாடங்களுக்கு மேலதிகமாக கற்பித்து எமது பாடசாலையின் சிறந்த பெறுபேற்றுக்கு உதவி புரிந்து வருகின்ற ஆசிரியர்களான திரு A.ஸ்ரனி, திருS.விமலதாஸ், திருS.ரவிக்குமார், திரு.S.பாஸ்கரன், செல்வி ம.றொகானி, செல்வி B..J.சந்திரிக்கா ஆகியோருக்கு எமது பாடசாலை சமூகம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றது.

க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றியோர் 7 பேராவர் இவர்கள் 7 பேரும் சித்தியடைந்துள்ளனர். இம்மாணவர்களை பாடசாலை சமூகம் வாழ்த்தி நிற்கின்றது. அத்தோடு இவர்களை ஊக்குவித்து வழிகாட்டிய ஆசிரியர்களையும் எமது பாடசாலை சமூகம் வாழ்த்தி நிற்கின்றது. மேலும் தமிழ், புவியியல், விவசாயம், வரலாறு, இந்துகலாசாரம், கிறிஸ்தவநாகரிகம், சித்திரம், பரதநாட்டியம் போன்ற பாடங்களில் நூறுவீத சித்திக்காக தங்களை அர்ப்பணித்து சேவையாற்றிய அனைத்து ஆசிரியர்களையும் பாடசாலை சமூகம் பாராட்டி நிற்கின்றது. இந்த நூறுவீத சித்தியினை பெறுவதற்கு காரணமான ஆசிரியர்களின் பெயர்கள் விபரம் வருமாறு.

1. செல்வி M.ஆன்துஷ்யந்தி - நாடகமும் அரங்கியலும், தமிழும்
2. திருமதி. M.தொம்மை - வரலாறு
3. திரு A. சில்வெஸ்ரர் - புவியியல்
4. திரு A. ஜெனிபேட் பீரிஸ் - கிறிஸ்தவநாகரிகம்
5. திரு A. கணேஸ்வரன் - இந்துநாகரிகம்
6. திரு J.T. சிம்சன் - சித்திரம்
7. திருமதி V. உமாசங்கர் - பரதநாட்டியம்
8. திரு A. அமிர்தநாதன் - விவசாயம்

எமது பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்து வருகின்ற எமது வலயக்கல்வி பணிப்பாளர் திரு A.J.குரூஸ் அவர்களுக்கும் , மாந்தைமேற்கு பனை, தென்னை வள அபிவிருத்தி சங்கத்தினருக்கும், எமது பாடசாலை வளர்ச்சியில் அக்கறை காட்டும் டிலாசால் அருட்சகோதரர்களுக்கும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஏழை மாணவர்களின் கற்றலுக்கு உதவி வழங்கும் மன்னார் துயர் துடைப்பு மறு வாழ்வுச்சங்கத்தினருக்கும், J.R.S நிறுவனத்தினருக்கும், அன்னை இல்ல நிறுவனத்தினருக்கும், பாஸ்ரர் ஜோசப் சவரிமுத்து அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

# பௌதீக மனிதவள அபிவிருத்தி

- 2013ஆம் ஆண்டு எமது பாடசாலையின் பௌதீக வளத்தினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு தர உள்ளீடு மூலதன நிதியில் இருந்து FM ஒலிவாங்கி மற்றும் மெகாபோன் , மைக்ஸ்ரான்ட், கெசியோ ஓகன் போன்ற பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டது.

- பாடசாலைக்கு ரூபா 12000.00 செலவில் புதிய மணி பெற்றுக் கொள்ளப்பட்டது. அத்தோடு விளையாட்டு நிகழ்வுகளுக்குத் தேவையான மத்தியஸ்தர் மேடையும் புதிதாக செய்யப்பட்டது.

- பாடசாலை சூழலை அழகு படுத்தும் பொருட்டு A/L மாணவர்களின் குழு செயற்றிட்டத்தின் மூலம் பாடசாலை மண்டபங்களுக்கு முன்னால் பூந்தொட்டிகள் அமைக்கப்பட்டு பூக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

- அதிபர் காரியாலயம் ரூபா 40000.00 செலவில் புனரமைக்கப்பட்டு நிர்வாக செயற்பாடுகளுக்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டுள்ளது.

- பொருத்தமான கணினியறை இல்லாமையினால் இதற்காக கல்வித் திணைக்களத்தின் MRC நிதியுதவியுடன் ரூபா 2,38000.00 செலவில் புதிய அறை உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

- கல்வித் திணைக்களத்தின் SDMG நிதியான 1,78000.00 ரூபாவை பயன் படுத்தி பாடசாலை வளவினுள் கரப்பந்தாட்ட மைதானம், வட்டக்கொட்டில், ஆசிரியர் விடுதிக்கான புதிய மின்னிணைப்பு, ஆசிரியர் விடுதிக்கான நுழைவாயில் கதவு போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதோடு,மழைகாலங்களில் நீர் தேங்கி நிற்கும் பாடசாலையின் பிரதான நுழைவாயிலுக்கு மண் நிரப்பி சீர் செய்யப் பட்டது. அத்தோடு சமையல் அறைக்கான நீர்க் கால்வாயும் அமைக்கப்பட்டது. மேலும் ஆரம்பப் பிரிவுக் கட்டடத்திற்கு முன்னால் அதனை அழகுபடுத்தும் பொருட்டு பூந்தொட்டியும் அமைக்கப்பட்டது.

- டிலாசால் அருட்சகோ. R.J.ஜெயகாந்தன் அவர்களின் மூலம் நன்கொடையாக பாடசாலைக்கான பெரிய குத்துவிளக்கு , பெரிய ஒலிபெருக்கி பெட்டிகள் இரண்டு, ஒலிவாங்கி போன்றனவும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- டிலாசால் அருட்சகோ.பிரவின் வாஸ் என்பவர் மூலம் ரூபா 28000.00 பெறுமதியான நிகழ்வுகளுக்கான மேடைக்குப் பயன்படுத்தக் கூடிய திரைச் சீலையானது டிலாசால் அருட்சகோதரர்களின் புனித பத்திராசியார் கல்லூரியின் நிதியின் மூலம் அன்பளிப்பாகப் பெறப்பட்டது.

- எமது பாடசாலையில் நீண்ட காலமாக போட்டோ பிரதி இயந்திரம் இல்லாமையினால் மாணவர்கள், ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பெரும் இடர்பாட்டை எதிர் நோக்க வேண்டி இருந்தது. எனவே எமது பாடசாலைக்கு போட்டோபிரதி இயந்திரத்தை வழங்கி உதவிய திரு.ஜெனிங்ஸ் மாந்தை மேற்கு பிரதேசச் சபைச் செயலாளர் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- மேற்குறிப்பிட்ட பௌதீக மனித வள அபிவிருத்தி செயற்பாடுகள் எமது பாடசாலையில் சிறப்பாக மேற்கொள்ளுவதற்கு தேவையான நிதியினையும் ஆலோசனைகளையும் வழங்கி எமது பாடசாலையின் வளர்சிக்கு உதவியாக இருந்து வருகின்ற எமது வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.A.J.குரூஸ் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

➢ எமது பாடசாலைக்கு 14,000 ரூபா பெறுமதியான புல் வெட்டும் இயந்திரம் (Grass Cutter) ஒன்று திரு. சீ. செபமாலை (நவம்) அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இவருக்கும் எமது நன்றிகள்.

➢ கடந்த இரண்டு வருடங்களாக பழுதடைந்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி 1,40000.00 செலவில் திருத்தியமைக்கப்பட்டு தற்போது பாடசாலை தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. இதற்காக நிதி உதவி செய்த எமது பாடசாலையின் ஆசிரியர் திரு J.T.சிம்சன் அவர்களிற்கும், டிலாசால் அருட்சகோதரர்களிற்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

## விளையாட்டுச் செயற்பாடுகள்

எமது பாடசாலை மாணவர்கள் கல்விச் செயற்பாட்டில் மட்டுமல்லாது விளையாட்டுச் செயற்பாடுகளிலும் ஈடுபடல் வேண்டுமென்ற அடிப்படையில் 2013ம் ஆண்டிற்கான விளையாட்டு செயற்பாடுகள் யாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

எமது வருடாந்த மெய்வல்லுனர் திறனாய்வுப்போட்டிகள் சிறப்புற நடைபெற உதவிய இல்லப்பொறுப்பாசிரியர்கள் வருமாறு.

1. சென்.செபஸ்ரியன் இல்லம் - திரு. பி.கணேஸ்வரன்
2. சென்.அன்ரனிஸ் இல்லம் - திரு. A.அன்ரனி ஜெனிபட் பீரிஸ்
3. சென்.யோசப் இல்லம் - திரு. S.A.சில்வெஸ்ரர்

## விளையாட்டுப்போட்டி அறிக்கை - 2013

### வலய மட்டத்தில் பெருவிளையாட்டுக்களில் பெற்ற இடங்கள்

| பிரிவு | நிகழ்வு | மட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15 வயது பெண்கள் | கரப்பந்து | வலயமட்டம் | 3ம் இடம் |
| 15 வயது பெண்கள் | வலைப்பந்து | வலயமட்டம் | 2ம் இடம் |
| 15 வயது பெண்கள் | கபடி | வலயமட்டம் | 1ம் இடம் |
| 17 வயது பெண்கள் | கபடி | வலயமட்டம் | 2ம் இடம் |
| 17 வயது பெண்கள் | கரப்பந்து | வலயமட்டம் | 1ம் இடம் |
| 19 வயது ஆண்கள் | கபடி | வலயமட்டம் | 1ம் இடம் |
| 19 வயது ஆண்கள் | கரப்பந்து | வலயமட்டம் | 1ம் இடம் |
| 19 வயது ஆண்கள் | எல்லே | வலயமட்டம் | 1ம் இடம் |
| 19 வயது ஆண்கள் | உதைபந்து | வலயமட்டம் | 2ம் இடம் |

## மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பெரு விளையாட்டுக்கள்

| பிரிவு | நிகழ்வு | மாவட்ட மட்டம் |
|---|---|---|
| 15 வயது பெண்கள் | கபடி | 1ம் இடம் |
| 17 வயது பெண்கள் | கபடி | 3ம் இடம் |
| 17 வயது பெண்கள் | கபடி | 1ம் இடம் |

## தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பெருவிளையாட்டு நிகழ்வு

| பிரிவு | நிகழ்வு | மாவட்ட மட்டம் |
|---|---|---|
| 15 வயது பெண்கள் | கபடி | 1ஆம் இடம் |

2013ம் ஆண்டு மெய்வல்லுனர் தடகளப்போட்டிகளில் எமது பாடசாலையின் மாணவர்கள் கோட்டம்,வலயம்,மாவட்டம்,மாகாணம்,தேசியம் ஆகிய போட்டிகளில் கலந்து தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியதுடன் மாகாண மட்ட போட்டிகளில் பங்குபற்றிய 15 வயதிற்குட்பட்ட பெண்கள் கபடி அணியினர் மூன்றாம் இடத்தை பெற்று மடு வலயமட்டத்திலிருந்து முதன்முதலாக மாகாண மட்ட பெருவிளையாட்டுகளில் வெற்றியீட்டி தேசியமட்டத்தில் பங்குபற்றி கால் இறுதிவரை தங்களது திறமையை வெளிப்படுத்தி பாடசாலைக்கும் வலயத்திற்கும் பெருமைதேடி தந்துள்ளனர்

எங்களது கபடி அணியினருக்கு பயிற்றுவிப்பாளர்களாக இருந்து எமக்கு உதவிபுரிந்த திரு.அனிஸ் , திரு.ஜக்சன் (டக்கா) ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதுடன் ஆசிரியர் இராஜமனோகரன் அவர்களுக்கும் எமது நன்றியினை தெரிவித்து நிற்கின்றோம். மேலும் விளையாட்டு பொறுப்பாசிரியராக இருந்து மாணவர்களுக்கு சிறப்பான பயிற்சியினை வழங்கி எமது மாணவர்கள் சாதனை படைக்க முழு மூச்சுடன் செயற்பட்ட ஆசிரியர் F.B.நிசாந் அவர்களுக்கு எமது பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

## போட்டிகள்

## தமிழ்த்தினப் போட்டி - 2013

நம் தாய்மொழியாம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் செழுமைக்கும். வித்திடும் வகையில் அகில இலங்கைத் தமிழத்தினம் வருடா வருடம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதற்கிணங்க மாணவர்களின் தமிழ் மொழியின் இசைநாடகம், குறுநாடக ஆக்கம், எழுத்து, புஸ்பாஞ்சலி, கீர்த்தனம், இசையும் அசைவும், கட்டுரை எழுதுதல், கவிதை எழுதுதல், எழுத்தாக்கம், குழுஇசை, ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு எமது பாடசாலை மாணவர்கள் வலயமட்டத்தில் இடங்களைப் பெற்றுள்ளது.

| இல | நிகழ்வுகள் | பிரிவு | மட்டம் | இடங்கள் |
|---|---|---|---|---|
| 01 | இசைநாடகம் | | வலயம் | 3ஆம் இடம் |
| 02 | குறு நாடகம்(எழுத்து) ச.திரேசில்டா | IV | வலயம் | 1ஆம் இடம் |
| 03 | குறு நாடகம்(எழுத்து) ப. பவுஸ்ரீனா | V | வலயம் | 1ஆம் இடம் |
| 04 | புஸ்பாஞ்சலி ப.கஜேந்தினி | III | வலயம் | 1ஆம் இடம் |
| 05 | கீர்த்தனம் க.லிட்வின் மிரியம் | III | வலயம் | 2ஆம் இடம் |
| 06 | கட்டுரை எழுதுதல் தே.மேரிபிரசன்னா | V | வலயம் | 1ஆம் இடம் |
| 07 | கவிதை ஜெனோ நிருசிக்கா | IV | வலயம் | 1ஆம் இடம் |
| 08 | எழுத்தாக்கம் கொ.டிசோன் | I | வலயம் | 2ஆம் இடம் |

## கணிதப் போட்டிகள்

| இல | நிகழ்வுகள் | மட்டம் | இடங்கள் |
|---|---|---|---|
| 01 | கணித வினாடி வினா | வலயம் | 1ஆம் இடம் |
| 02 | கணித நாடகம் | வலயம் | 3ஆம் இடம் |

## சமூக விஞ்ஞானப் போட்டி

| இல | நிகழ்வுகள் | தரம் | மட்டம் | இடங்கள் |
|---|---|---|---|---|
| 01 | ச.வர்ஷா | 6 | வலயம் | 2ஆம் இடம் |
| 02 | றோ.பியூறிக்கா | 9 | வலயம் | 1ஆம் இடம் |
| 03 | க.தட்சாயினி | 10 | வலயம் | 2ஆம் இடம் |
| 04 | ஜெ.ஜெனோ நிருசிக்கா | 11 | வலயம் | 3ஆம் இடம் |
| 05 | T.மேரி பிரசன்னா | 12 | வலயம் | 2ஆம் இடம் |

## சிறுவர் நாடகப் போட்டி

| | |
|---|---|
| வலயம் மட்டம் | 1ஆம் இடம் |
| உப மாகாணம் | 2ஆம் இடம் |

## வணிகப் போட்டிகள்

| இல | பங்குபற்றியோர் | நிகழ்வுகள் | மட்டம் | இடங்கள் |
|---|---|---|---|---|
| 01 | நீ.பிதூஸ்மன் | கட்டுரை | வலயம் | 1ஆம் இடம் |
| 02 | ச.கெலன்சி | | | 2ஆம் இடம் |
| 03 | ச.திரேசில்டா | பேச்சு | | 2ஆம் இடம் |

## இரண்டாம் மொழி சிங்களப் போட்டிகள் (வாசிப்பு)

### வலயமட்டம்

| | | |
|---|---|---|
| 01 | எ.யுஸ்ரின்மரினா | 1 ஆம் இடம் |
| 02 | எ.துசிக்கா | 2 ஆம் இடம் |
| 03 | ர.கஜேந்தினி | 1 ஆம் இடம் |
| 04 | பி.பிறிந்திசி | 1 ஆம் இடம் |

## ஏனைய போட்டி நிகழ்வுகள்

| பெயர் | நிகழ்வுகள் | மட்டம் | இடங்கள் |
|---|---|---|---|
| ப.பவுஸ்ரீனா | கட்டுரை (பொதுநலவாய நாட்டு அமைப்பு போட்டி) | மாவட்டமட்டம் | 1ஆம் இடம் |
| ந.லிவின்ரா | திருக்குறள் போட்டி | வலயம் | 3ஆம் இடம் |
| மை.றுக்ஷாந் | சித்திரப் போட்டி | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| சி.மெரின் யுனிஸ்கா | சித்திரப் போட்டி | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| அ.ஜெறாட்சன் | சித்திரப் போட்டி | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| அ.ஜெறாட்சன் | கணித போட்டி | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| த.தர்மினி | சித்திரப் போட்டி | வலயமட்டம் | 3ஆம் இடம் |

### ஆங்கில தினப் போட்டி - 2013

ஆங்கில மொழி விருத்தி செயற்பாடாக பாடசாலை கோட்டம், வலயம், மாகாணம் ஆகிய மட்டங்களில் ஆங்கிலப் போட்டிகள் எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் நடைபெற்றது.
கவிதைகூறல், கட்டுரையாக்கம், பேச்சு, பாட்டிசைத்தல், தனி நடிப்பு, கலந்துரையாடல், சொல்வளம், செய்தி வாசித்தல் ஆகிய பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்று அவர்களதுதிறமைக்கு ஏற்றவகையில் இடங்களைப் பெற்றுக் கொண்டனர்.

## Zonal Level Places List

| No | Name | Grade | Event | Place |
|---|---|---|---|---|
| 1 | Miss.Liokanth Lishani | 3 | Recitation | 3 |
| 2 | Master.Axshayan Jayakumar | 4 | Recitation | 3 |
| 3 | Miss.Amalanathan Venuja | 8 | Recitation | 2 |
| 4 | Miss.Anthonipillai Enokka | 9 | Recitation | 2 |
| 5 | Miss.Francis Xaver Frinthishi | 9 | Recitation | 1 |
| 6 | Miss.Santhan Merin Fairta | 10 | Recitation | 3 |
| 7 | Miss.Jesuthsan Nirusika | 11 | Recitation | 1 |
| 8 | Miss.Stanislas Kepciya | 11 | Recitation | 2 |
| 9 | Miss.Liokanth Lishani | 3 | Reading | 1 |
| 10 | Miss.Francis Xaver Frinthishi | 9 | Story Telling | 1 |
| 11 | Miss.Christion Helency | 12 | News Reading | 3 |
| 12 | Miss. S. Thiresilda | 12 | Oratory | 3 |
| 13 | Master.Sanujan | 12 | Solo acting | 1 |
| 14 | Master.Dinuskar Jebakiritham | 5 | Copy writing | 3 |
| 15 | Miss.Thevarasa Mary Presana | 13 | Copy writing | 1 |
| 16 | Mater.Dishon Consalves | 5 | Dictation | 3 |
| 17 | Miss.Francis Xaver Frinthishi | 9 | Dictation | 1 |
| 18 | Miss.Rosary Srithar Piurica | 9 | Creative writing | 2 |
| 19 | Miss.Anton Savior Mary Menresha | 9 | Creative writing | 3 |
| 20 | Miss.Sebastian Mary Nivethika | 12 | Creative writing | 1 |
| 21 | Miss.Kurusamy Nanthakumary | 12 | Creative writing | 2 |
| 22 | Miss.Christion Helancy | 12 | Oratory | 1 |

## Group Event - 2013

| No | Event | Grade | Place |
|---|---|---|---|
| 1 | Roleplay | 9 | 1 |
| 2 | Roleplay | 6 | 2 |
| 3 | Roleplay | 10 | 3 |
| 4 | Action Song | ( 3 - 5 ) | 3 |
| 5 | Group Song | ( 6 – 9 ) | 2 |
| 6 | Group Song | (10 – 13) | 2 |

## உயர்தர மாணவர் ஒன்றியம்

தரம் 1 - 13 வரை கல்வி கற்று வெளியேறும் மாணவ சமுதாயத்தில் தேசியகல்விக் கொள்கைகளுக்கு ஏற்ப மாறிவரும் உலகில் ஆளுமையும் ,அறிவும் பண்பும் கொண்ட சமூகம் ஒன்றை உருவாக்கும் வகையில் மாணவர்களின் தேர்ச்சியை வளர்த்து சமுதாயத்திற்கு அவர்களை கையளிக்க வேண்டுமென்பதே எமது பாடசாலையின் எதிர்பார்ப்பாகும். இவ்வொன்றியமானது கல்வி உட்பட ஏனைய பணிகளிலும் தன்னை இணைத்து செயலாற்றிவருகின்றது. இலைமறைகாயாக மறைந்து கிடக்கும் எமது மாணவர்களின் படைப்பாற்றல்களை வெளிக் கொண்டு வர கதிர், விம்பம் போன்ற மலர்களை வெளியிட்டு வருகின்றது.

மேலும் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசான்களின் சேவையைப் பாராட்டி ஆசிரியர் தின விழாவை வெகு விமரிசையாக கொண்டாடி வருகின்றது அத்துடன் பாடசாலையில் இடம் பெறும் ஏனைய விழாக்களாகிய ஒளிவிழா, வாணிவிழா மற்றும் சமய செயற்பாடுகள்,சமூகப்பணிகள், சிரமதானம் போன்ற நிகழ்வுகளில் அக்கறை காட்டி செயல்படுகின்றது.

2013ஆம் ஆண்டிற்கான ஒன்றுகூடல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மடு வலயகல்விப் பணிப்பாளர் திரு.ஏ.ஜே.குரூஸ் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். மற்றும் ஏனைய அயல் பாடசாலைகளில் இருந்து ஆசிரியர்களும் உயர்தர மாணவமாணவிகளும் கலந்து சிறப்பித்தார்கள்.சென்ற வருடம் வெளியேறிய தரம் 13ம் ஆண்டு மாணவர்கள் எமது பாடசாலையை அழகுபடுத்தும் முகமாக ஆரம்ப பிரிவிற்கு முன்பாக பூம்பாத்திகள் அமைத்தனர் இம்மன்றத்திற்குப் பொறுப்பாக இருந்து மாணவர்களை வழி நடத்தும் ஆசிரியர் S.A.சில்வெஸ்ரர் அவர்களுக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

***தலைவர்*** :- ர.றொகாட்சன்

***செயலாளர்*** :- தே.மேரிபிரசன்னா

## கல்லூரியின் Western Band வாத்தியக் குழு

இப்பிரதேசத்தின் புத்திஜீவிகள் உருவாக்கத்தின் ஒரு உற்பத்தி தோற்றுவாயாக எமது பாடசாலை விளங்குகின்றது. கல்வியோடு சமுதாய கட்டுருவாக்கப் பணிகளையும். எமது பாடசாலை செவ்வனே ஆற்றி வருகின்றது. அந்த வகையில் எமது பாடசாலையின் Band வாத்தியக் குழுவின் செயற்பாடுகளும் குறிப்பிட்டு சொல்லக் கூடிய வகையில் அமைந்திருக்கின்றது.

இடம் பெயர்ந்து மீள் குடியமர்ந்த பின் கௌரவ அமைச்சர் அல்ஹாஜ் றிசாட் பதியுதீன் (வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர்) அவர்களால் எமது பாடசாலைக்கு Band வாத்திய கருவிகள் வழங்கப்பட்டன.

இவ் Band வாத்தியமானது முதன் முதலாக 16.01.2014 அன்று இடம் பெற்ற தரம் 01 மாணவர்களின் கால் கோள் விழாவிற்கு இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 31.01.2014 அன்று நடை பெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கும் 07.04.2014 அன்று நடைபெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுக்கும் சிறந்த முறையில் இசைத்து பலரது பாராட்டைப் பெற்றது.

இவ் Band வாத்திய இசைக் கருவியினை இசைப்பதற்கு திரு.அ.கெவின் மதுசுபன் என்பவர் மாணவர்களைப் பயிற்றுவித்து சிறந்த முறையில் இசைப்பதற்கு உதவி புரிந்தார்.

மேலும் தற்போதய சூழலில் Band வாத்திய அணியை மறுசீரமைக்கும் நோக்கில் மேலும் ஒரு அணியை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு சீருடைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் சிறப்பான பயிற்சிகளை வழங்குவதற்கும் புதிய வாத்தியக் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்குமான முன்மொழிவுகள் வழங்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

எதிர் காலத்தில் மடு வலயப் பாடசாலைகளில் ஒரு சிறந்த Band வாத்திய அணியாகவும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த ஒரு குழுவாகவும் இது வளரும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான நிலையை அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து இக்குழுவை வாழ்த்தி நிற்கின்றேன். இதற்குப் பொறுப்பாசிரியராக திரு. S. A. சில்வெஸ்ரர் கடமையாற்றி வருகின்றார்.

## பாடசாலை நூலகம்

"மாணவர்களின் சுயகற்றலுக்கு உதவுவது நூலகம்" என்ற வாக்கிற்கு இணங்க பாடசாலையினை உயிர்த்துடிப்பாக்குவது நூலகமாகும். இன்றைய நவீன உலகின் உண்மையான பல்கலைக்கழகம் என்பது நூல்கள் நிறைந்த நூலகமாகும். ஒருமாணவன் தனது ஐந்து வயது முதல் பத்தொன்பது வயது வரை பாடசாலைக் கற்றலிலே தனது காலத்தினைக் கழிக்கின்றான். இக்காலப் பகுதியில் இவன் சிறந்த முறையில் கல்வி என்னும் ஏணியில் ஏறுவதற்கு இவனுக்கு பாடசாலை நூலகம் உதவுகிறது.

அந்த வகையில் மன்/ கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் தமது கற்றலை மேம்படுத்துவதற்காக எமது பாடசாலையின் நூலகம் சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. எமது நூலகத்தில் தற்போது 1700 நூல்கள் உள்ளன. மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்த உதயன் பத்திரிகை பெற்றுக் கொள்ளப் படுகின்றது. கல்வித் திணைக்களம் , அரசசார்பற்ற நிறுவனங்கள்,மத்திய வங்கி,இந்துகலாசார அலுவல்கள் திணைக்களம், நலன்விரும்பிகளின் அன்பளிப்பு, மாணவர்களின் அன்பளிப்பு, ஆசிரியர்களின் அன்பளிப்பு போன்ற பல்வேறு ஈட்டல் முறைகளில் எமது பாடசாலை நூலகத்திற்கு நூல்கள் கிடைக்கின்றன.

குறிப்பாக எமது பாடசாலை மாணவர்கள் தமது பிறந்தநாள் நினைவாக பாடசாலை நூலகத்திற்கு ஒரு நூலினை அன்பளிப்புச் செய்வது இங்கு குறிப்பிடத்தக்க சிறப்பான ஓர் அம்சமாகும். அந்தவகையில் 2013ம் ஆண்டில் 50இற்கு மேற்பட்ட நூல்கள் அன்பளிப்பாகக் கிடைத்துள்ளது.

எமது பாடசாலை நூலகத்திற்கு திருமதி. சி. றதீஸ்குமார் அவர்கள் பொறுப்பாக இருந்து செயற்பட்டு வருகின்றார்.

## கிறிஸ்தவ மன்ற அறிக்கை

ஒவ்வொரு மாணவர்களிடத்திலும் ஆன்மீகத்தை வளர்த்தெடுப்பதற்கு விழுமியம் பண்பாடு கலாசாரம் போன்றன உதவுகின்றன இவற்றை மேம்படுத்த சமயங்கள் பங்களிப்புச்செய்கின்றன.

எமது பாடசாலையில் பெரும்பான்மை மாணவர்கள் கிறிஸ்தவர்கள் அவர்களின் சமய வளர்ச்சிக்கு பாடசாலையில் சமய வழிபாடு தியானம் கத்தோலிக்க மன்றம் பெரும் உறுதுணையாக இருந்து வருகின்றது. இம்மன்றமானது மாணவர்களின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகின்றது

இம்மன்றமானது மாதாந்த கூட்டங்களை நடாத்துதல், முதல் வெள்ளி திருப்பலிகளை நடாத்துதல், மறைக்கல்வி பரீட்சைகளுக்கு உதவுதல், மற்றும் ஒளிவிழா நிகழ்வுகளையும் முன்னின்று செய்து வருகின்றது.

இம்மன்றமானது திரு ஜெனிபட் பீரிஸ் ஆசிரியரின் வழிநடத்தலின் கீழ் தலைமை செல்வி ச.திரேசில்டா அவர்களையும் செயலாளராக செல்வி கெலன்சி என்பவரையும் கொண்டு நடாத்தப்பட்டு வருகின்றது .இவர்களின் தலைமையில் ஒளிவிழா நிகழ்வானது மிகச்சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது

ஒளிவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர் மத்தியில் பாலன்குடில் அமைத்தல் கவிதை எழுதுதல் சித்திரம் வரைதல் போன்ற போட்டிகள் வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்ட மூன்று மாணவர்களுக்கு ஒளிவிழாவின் போது பரிசில்கள் வழங்கப்பட்டன.

இம்மன்றமானது மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்

## இந்து மாமன்றம்

மாணவர்களிடத்தில் விழுமியம், பண்பாடு, கலாசாரம் போன்றவற்றினை வளர்த்தெடுப்பதற்கு அவர்களது சமயம் பங்காற்றுகிறது. அதனை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு பாடசாலைச் சூழல் பங்காற்றுகின்றது.

எமது பாடசாலையில் கிட்டத்தட்ட 80ற்கு மேற்பட்ட சைவ மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களது சமய வளர்ச்சிக்காக பாடசாலையில் காலைப்பிரார்த்தனை நடைபெறுகின்றது. இது மட்டுமன்றி சைவசமய வளர்ச்சிக்கு இந்துமாமன்றம் பங்களிப்புச் செய்கின்றது. இந்துமாமன்றமானது

1. மாதாந்தக் கூட்டம் நடாத்துதல்.
2. சமய அறிவுப்போட்டிகளை நடாத்துதல்.
3. சைவபரிபாலன சபைப் பரீட்சை நடாத்துதல்.
4. நவராத்திரி பூசை நடாத்துதல்.

போன்ற செயற்பாடுகளை முன்னின்று செய்து வருகின்றது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வாரத்தில் வரும் புதன் கிழமைகளில் இந்து மாமன்றம் கூடும். இதில் மாணவர்களின் பாடல் , நடனம், வினாடிவினா, பேச்சு போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

சிவராத்திரி தினத்தினை முன்னிட்டு திருக்கேதீஸ்வர ஆலய சிவராத்திரி மடத்தினர் நடாத்திய சமய அறிவுப்போட்டியில் பேச்சுப் போட்டி தரம் 6 செல்வன் ஜெ.விதுசிகன் 3ஆம் இடம், தரம் 11 சி.பிரசாந்தினி 3ஆம் இடம், கோலப்போட்டி தரம் 9 வி. பிரியதர்சினி 3ஆம் இடம் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துத் தந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை வருடம் தோறும் நடாத்தும் சைவசமயம், தமிழ்மொழி ஆகிய பாடப் பரீட்சைகளில் எமது பாடசாலை மாணவர்கள் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துத் தந்துள்ளனர்.

எமது பாடசாலையில் நவராத்திரி பூசை மிகச் சிறப்பாக நடைபெற்று வருவது அனைவரும் அறிந்த உண்மை. நவராத்திரி விரத காலங்களில் சைவமாணவர்கள் விரதம் அனுட்டிப்பதற்கும், வழிபாட்டினை மேற்கொள்வதற்கும். எமது பாடசாலை வழிசமைத்துக் கொடுக்கின்றது. இந்து மாணவர்களின் தொகை குறைவாக இருந்தாலும் பாடசாலையின் அனைத்து மாணவர்களும் இதில் பங்கு கொள்வது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நவராத்தி பூசைக்கால ஒன்பது தினங்களும் ஒவ்வொரு வகுப்பிற்கும் பூசைகள் வழங்கப்பட்டுள்ளது. இறுதிநாளாகிய விஜயதசமி அன்று பாடசாலை அதிபர், ஆசிரியர், பெற்றோர், நலன்விரும்பிகளின் ஆதரவுடன் வாணிவிழா நிகழ்வுகள் இடம் பெறும். அன்றைய தினம் பாடசாலையில் ஏடு தொடக்குதல் நிகழ்வும் இடம் பெறும்.

இந்துமாமன்றச் செயற்பாடுகளுக்கு பாடசாலையின் இந்து ஆசிரியர்கள் பங்களிப்புச் செய்கின்றனர். இம் மன்றத்தின் தலைவராக செல்வன் ச.லதுர்சன் அவர்களும் செயலாளராக செல்வி கு.நந்தகுமாரி அவர்களும் பொறுப்பாசிரியராக திருமதி சி.றதீஸ்குமார் அவர்களும் கடமையாற்றி வருகின்றனர்.

## புனித வின்சென்ற் டீ பவுல்

இப்பாடசாலையில் கல்வி கற்கும் ஏழை மாணவர்களின் நலன் கருதி உதவிகள் வழங்கப்பட்டு வருவதோடு பொது நலப் பணிகளிலும் இச்சபையின் மூலமாக ஈடுபட்டு வருகின்றனர்

எமது பாடசாலையில் புனித வின்செனற் டீ பவுல் மாணவர் பந்தி தரம் 6-13 வரை கல்வி பயிலும் மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது.

மாணவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமைகளில் மாணவர் ஒன்று கூடலில் அனைத்து மாணவர்களிடமும் இருந்து அவர்களின் ஒறுத்தல் முயற்சியினால் ஒரு சிறிய தொகைப்பணம் பெறப்பட்டு மாணவர்களுக்குப் பரீட்சைக்கட்டணம், வசதிகள் சேவைக் கட்டணம், காலை உணவு வசதிகள், மருத்துவச் செலவுகள் போன்றவற்றை வழங்கி வருகின்றது. இதற்காக ஆசிரியர்களும் உதவி வருவது குறிப்பிடத்தக்கது.

